**அகலவத்த பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அகலவத்த பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் சம்பள மீளளிப்புகளில் இருந்து அறவிடப்பட்ட கப் வண்டியின் கடன் தவணைப்பணமான ரூபா 1,059,409 தொகை வருமான உதவிக் கணக்கிற்கு சேர்க்கப்பட வேண்டிய போதிலும் அம் மீதி கணக்கில் இருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதியில் வருமான உதவி மீதி ரூபா 2,118,818 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கு உரித்தான கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்புகளான ரூபா 1,364,076 தொகை வருமான மானியக் கணக்கிற்கு மாத்திரம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் கணக்கின் ரூபா 29,575,556 தொகையான மீதி, பரீட்சை மீதியில் ரூபா 29,389,071 ஆகக் கொண்டுவரப்பட்டு தீர்த்துவைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கில் ஆரம்ப மீதியாக மேற்குறித்த தவறான மீதி காண்பிக்கப்பட்டு ரூபா 186,476 தொகை அக் கணக்கிற்கு சேர்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு உரித்தான எதிர்ப் பதிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தனியான கடன்கொடுத்தோர் மீதி காண்பிக்கப்படும் பட்டோலை அல்லது பதிவேடுகள் இன்மையால் 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவி வரும் ரூபா 81,940,449 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,277,810 ஆக இருந்ததுடன் அதற்கு மாறாக முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 6,465,286 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,799 | 2,161 | 952 |
| (ii) | வாடகை | 2,048 | 1,894 | 155 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 137 | 137 | -- |

**2.2.2 வீதவரி**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 912,926 தொகையான நிலுவை வீத வரி மீதி 2015 யூலை 15 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 431,892 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 481,034 தொகையான மீதி அறவிடப்பட இருந்தது.

**2.2.3 ஏக்கர் வரி**

2014 நவம்பர் 30 ஆம் திகதியில் உள்ளவாறு 41 வரி செலுத்துனர்களிடம் இருந்து ரூபா 9,415 தொகையான ஏக்கர் வரி மீதி நிலுவையாகக் காணப்பட்டதுடன் இதில் 5 ஆண்டுகளும் அதற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டுவரும் வரி செலுத்துனர்கள் மூவரிடம் இருந்து அறவிடப்பட்ட வேண்டிய தொகை ரூபா 2,276 ஆகக் காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 போதிய அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது சபையின் விழா நடவடிக்கைகளுக்காக தலைமை அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் செலவினத்திற்காக பெறப்பட்டிருந்த அங்கீகாரத்திற்கு மேலதிகமாக ரூபா 180,500 இற்காக சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டில் கோவையின் 3.9.1 ஆம் ஏற்பாடுகளின் பிரகாரம் மக்கள் சார் அமைப்புகளுக்காக நேரடியான ஒப்பந்தங்கள் வழங்கப்படுகையில் ஏதேனும் குறித்த காலப்பகுதியில் ஓர் சங்கத்தால் மேற்கொள்ளப்படும் சகல ஒப்பந்த எண்ணிக்கையும் மூன்றை மிகைத்தலாகாத போதிலும் இதற்கு மாறாக இரு சங்கங்களுக்கு ஒரே காலப்பகுதியின் போது 05 செயற்திட்டங்களும் 04 செயற்திட்டங்களும் வழங்கப்பட்டிருந்தன.

### 3.3 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

(அ) 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ.⁚.2002.⁚.02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி நிறுவகங்களின் அதிகாரங்களை ஒப்படைப்பது மற்றும் அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கோவையில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் செயற்பாட்டின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டிய போதிலும் ஒரு வியாபார நிலையத்திற்காக 2012 ஆம் ஆண்டில் இருந்தும் மேலும் 02 வியாபார நிலையங்களுக்காக 2013 ஆம் ஆண்டில் இருந்தும் மேலும் ஓர் வியாபார நிலையத்திற்காக 2014 ஆம் ஆண்டிற்காகவும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைத் தலைவரும் 8 அமைச்சர்களும் வெளிநாட்டுக் ஆய்வுச் சுற்றுப் பயணம் ஒன்றில் ஈடுபட்டிருந்ததுடன் இதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 1,357,710 தொகை செலவிடப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வெளிநாட்டுப் பயணத்திற்கான ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏற்பாடு ஒதுக்கப்பட்டிராமையால் மேற்குறித்த வெளிநாட்டுப் போக்குவரத்துச் செலவினம் அமைச்சர்களின் அபிவிருத்தித் தீர்மானச் செலவின விடயங்களில் இருந்து ஏற்கப்பட்டிருந்த போதிலும் அச் செலவின விடயத்திலிருந்தும் அன்றைய தினத்தில் எஞ்சியிருந்த ஏற்பாடு ரூபா 1,007,675 ஆகக் காணப்பட்டது. இதனால் ஏற்பாட்டிற்கும் மேலாக ரூபா 350,035 செலவிடப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த செலவினம் ஏற்கப்படுகையில்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 170 ஆம் பிரிவு மற்றும் 1988 இன் பிரதேச சபை ( நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளின் ஐஐ ஆம் அத்தியாயத்தின் 14 ஆம் பந்தியின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2010 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதி ரூபா 43,795 தொகையும் பெறுமதி சேர் வரி மீதியான ரூபா 754,610 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) செலவினக் கட்டுப்பாடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) செயற்திட்ட நிருவாகம்